# நமது தின கனி


காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 82 | 4 Pages | 24.10.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 82 | 4 பக்கங்கள் | 24.10.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## வடகொரியாவுக்கு எதிராக தென்கொரியாவில் மீண்டும் கூட்டுப்போர் பயிற்சி



சியோல், அக். 24

கொரிய தீபகற்ப பகுதியில் வடகொரியா தொடர் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனைகளை நடத்துகின்றது. இதனால் தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் போர்ப்பதற்றம் ஏற்படுகிறது. எனவே பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் நோக்கில் இந்த இருநாடுகளும் அமெரிக்காவுடன் இணைந்து அவ்வப்போது கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன. ஆனால் வடகொரியா இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறது.

இந்தநிலையில் தென்கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் மீண்டும் முத்தரப்பு கூட்டுப்போர் பயிற்சியை தொடங்கின. தென்கொரிய தீபகற்ப பகுதியில் நேற்று தொடங்கிய இந்த பயிற்சியில் அமெரிக்காவின் அணுசக்தி திறன் கொண்ட பி52 மூலோபாய வெடிகுண்டு சோதனை மற்றும் போர் விமானங்களும் ஈடுபடுத்தப்பட்டதாக தென்கொரிய பாதுகாப்பு அமைச்சகம் கூறியது.

## காசாவுக்கு தேவையான மனிதநேய உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்: பைடன், நெதன்யாகு ஒப்புதல்



வாஷிங்டன், அக். 24

இஸ்ரேல் மீது கடந்த 7ந்தேதி திடீரென தரை, கடல் மற்றும் வான்வழியே தாக்குதலை தொடுத்த ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு ஆயிரத்திற்கும் மேற்பட்ட ராக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. பின்னர் அந்நாட்டு எல்லைக்குள் அதிரடியாக புகுந்து ஆண்கள் மற்றும் பெண்கள் என சிக்கியவர்களை கடுமையாக அடித்து, தாக்கி வன்முறையில் ஈடுபட்டது. இதில், 260 பேர் கொல்லப்பட்டனர்.

210 பேரை பணய கைதிகளாக சிறை பிடித்து சென்றது. இதனை தொடர்ந்து, இஸ்ரேல் அரசும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. பணய கைதிகளை மீட்கும் முயற்சியும் ஒருபுறம் நடந்து வருகிறது. இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே தொடர்ந்து இரு வாரங்களுக்கும் கூடுதலாக நடந்து வரும் மோதலால் இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளனர்.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை, இத்தாலி நாட்டின் பிரதமர் ஜார்ஜியா மெலோனி நேரில் சந்தித்து பேசினார். இதேபோன்று, சைப்ரஸ் நாட்டின் அதிபர் கிறிஸ்டோதவுலைட்ஸ் உடனும் நெதன்யாகுவின் சந்திப்பு நடந்தது. இதற்கு முன்பு அமெரிக்க அதிபர் பைடன், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் ஆகியோர் இஸ்ரேலுக்கு சென்று தங்களுடைய ஆதரவை வெளிப்படுத்தினர்.

இதனால், இஸ்ரேலுக்கான ஆதரவு பெருகி வருகிறது. ஒருபுறம் தாக்குதல் நடந்தபோதும், காசாவுக்கான நிவாரண பொருட்களை அனுப்பும் பணிகளும் நடந்து வருகின்றன. இந்நிலையில், அமெரிக்க அதிபர் பைடன், தொலைபேசி வழியே இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவை தொடர்பு கொண்டு இன்று பேசினார்.

அப்போது, காசாவுக்கு தேவையான மனிதநேய உதவி மற்றும் நிவாரண பொருட்களை தொடர்ந்து வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது என்று பைடன் கூறியுள்ளார்.

காசா மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வளர்ச்சி பணிகளை பற்றி ஆலோசனை மேற்கொள்வதற்காக நெதன்யாகுவை பைடன் தொடர்பு கொண்டு பேசினார் என்று வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்த பேச்சின்போது, ஹமாஸ் அமைப்பினரால் சிறை பிடித்து கொண்டு செல்லப்பட்ட அமெரிக்க குடிமக்கள் உள்ளிட்ட மீதமுள்ள பணய கைதிகளையும் பாதுகாப்பாக விடுவிக்க செய்வதற்காக நடந்து வரும் முயற்சிகளை பற்றியும் இரு நாட்டு தலைவர்கள் விவாதித்தனர்.

காசாவில் உள்ள அமெரிக்க நாட்டு மக்கள் மற்றும் பிற நாடுகளின் குடிமக்கள், பாதுகாப்பாக வெளியேறுவதற்கான வழிகளை உருவாக்கி தருவது பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

பைடன் மற்றும் நெதன்யாகு என இரு தலைவர்களும் தொடர்ந்து தொடர்பில் இருப்பது என ஒப்புதல் அளித்துள்ளனர் என வெள்ளை மாளிகை அறிக்கை தெரிவிக்கின்றது.

காசாவில் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதலை தொடுத்தபோதும், காசா முனை பகுதிக்கு நிவாரண பொருட்களுடன் ரபா பகுதி வழியே 14 வாகனங்கள் இன்று சென்றடைந்துள்ளன என சி.என்.என். தகவல் தெரிவிக்கின்றது.

# பாரா ஆசிய விளையாட்டு போட்டி; வெள்ளிப்பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, அக். 24

பாரா ஆசிய விளையாட்டு போட்டி சீனாவில் நடைப்பெற்று வருகிறது.

இந்த தொடரில் உயரம் தாண்டுதல் T63 பிரிவில் தமிழக வீரர் மாரியப்பன் தங்கவேலு வெள்ளிப்பதக்கம் வென்று அசத்தினார். இந்நிலையில் வெள்ளிப்பதக்கம்



வென்ற மாரியப்பன் தங்கவேலுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

பாரா ஆசிய விளையாட்டு போட்டியில் உயரம் தாண்டுதல் T63 பிரிவில் வெள்ளி வென்று தமிழ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் மீண்டுமொருமுறை பெருமை தேடித்தந்துள்ள நமது மாரியப்பன் தங்கவேலு அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிஜம் நிழலாகிறது.. எடப்பாடி பழனிசாமியுடன் இணையும் "பெரிய பிரபலம்".. திமுக மிஸ் பண்ணுதா? சிக்கலாகுமே?

சென்னை, அக். 24

"கூட்டணி முறிந்தது முறிந்ததுதான், கதம் கதம்.. இனி மீண்டும் இணைவதற்கு வாய்ப்பே இல்லை" என்று எடப்பாடி பழனிசாமி சொல்லிவிட்டாலும், இதுவரை அதிமுகவுடன் எந்த கட்சியும் கூட்டணியை வைக்கவில்லை. அது தொடர்பான உறுதியான அறிவிப்புகளும் இதுவரை வரவில்லை.

பாஜக கூட்டணியிலிருந்து, இப்போது விலகியிருப்பது, அதிமுகவுக்கு கூடுதல் பலத்தை தந்து கொண்டிருப்பதுடன், பாஜக எதிர்ப்பு வலுவாக உள்ள தமிழகத்தில், அந்த வாக்குகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தையாவது இந்த முறை பெற்றுவிடும் என்கிறார்கள்.

மெகா கூட்டணி: இதற்கு மேலும் வலு சேர்ப்பதற்காகவே, திமுக கூட்டணியிலிருக்கும் சில கட்சிகளையும் தங்கள் பக்கம் கொண்டுவர அதிமுக முயற்சிப்பதாக தெரிகிறது. காரணம், மெகா கூட்டணி வைத்து போட்டியிடுவோம் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்து ஒரு வருடமாகியும், அதற்கான அறிகுறிகள் இதுவரை தென்படவில்லை. யாருடன் கூட்டணி வைக்க போகிறார் என்றும் இதுவரை முடிவாகவில்லை. ஆனால், திமுகவுக்கு இணையான கூட்டணியை உருவாக்க வேண்டிய கட்டாயம் அதிமுகவுக்கு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே, பாரிவேந்தர், டாக்டர் கிருஷ்ணசாமி, ஏசி சண்முகம், ஜிகேவாசன், ஜான்பாண்டியன் போன்றோருடன் நல்ல இணக்கமான போக்கை அதிமுக கொண்டிருந்தாலும், திமுகவின் வாக்குகளை தங்கள் பக்கம் திருப்ப, பெரிய கட்சிகளின் தயவும் அதிமுகவுக்கு தேவையாக இருக்கிறது.. அதனால்தான், பாமகவிடம் பேச்சு நடப்பதாக சலசலக்கப்படுகிறது.

நிபந்தனைகள்: எனினும், சில நிபந்தனைகள் இரு தருப்பிலுமே போடப்பட்டிருப்பதாக சொல்கிறார்கள்.. அல்லது பாஜக பக்கம் பாமக சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் சொல்கிறார்கள். இப்படி இழுபறி நீடித்தவாறே உள்ள நிலையில், பாமக இதுவரை எந்த முடிவையும் வெளிப்படுத்தவில்லை. ஒருவேளை பாஜக பக்கம் பாமக தாவினால், விசிகவை அதிமுகவுக்கு இழுக்கும் முயற்சியும் ஆரம்பமாகும் என்கிறார்கள்.

எனினும், மெகா கூட்டணி அமைக்க, இந்த கட்சிகள் மட்டுமே போதாது என்பதை உணர்ந்துதான், திமுக கூட்டணி கட்சிகளிடமும் பக்கம் வலையை விரிக்க முயன்றது அதிமுக.. ஆனால், அங்கிருந்து யாருமே, இப்போதைக்கு கூட்டணி மாறுவது போல தெரியவில்லை.. எனவே, திமுக கூட்டணியை சாராத கட்சிகள் + பாஜக எதிர்ப்புடைய கட்சிகளுக்கு அதிமுக தூண்டில் வீசிவருகிறதாம்.

சீமான் பளீர்: அந்தவகையில், சீமானிடம் பேசியதாக தெரிகிறது. ஆனால், அவர் கூட்டணிக்கு ஒப்புக்கொள்ளவில்லையாம். இதை சீமானே ஓபனாக செய்தியாளர்களிடம் சொல்லிவிட்டார். இதற்கு பிறகு, அதிமுகவின் "குறி" கமல்ஹாசன் பக்கம் திரும்பியிருக்கிறதாம்..

இதற்கு காரணம், பாஜகவை மிக தீவிரமாக எதிர்த்து வருபவர்களில் கமல்ஹாசனும் ஒருவர். கமலை பொறுத்தவரை, இந்த முறை கூட்டணி வைத்து போட்டியிடுவது என்ற முடிவில் இருக்கிறார்.. அதே சமயம் "பாஜக எதிர்ப்பு" என்பதிலும் உறுதியாக உள்ளார். அதனால்தான், திமுக கூட்டணியில், காங்கிரஸ் தயவுடன் இணைந்து தேர்தலை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.

புதிய கட்சிகள்: ஆனால், திமுக கூட்டணியில் ஏற்கனவே "ஹவுஸ் புல்" கட்சிகள் இருப்பதால், புதிய கட்சிகள் இணைவது சிரமம் என்கிறார்கள். அப்படியே கூட்டணியில் இணைந்தாலும், சீட் ஒதுக்கீடுகளில் சிக்கல் எழக்கூடும். அப்படியே சீட் ஒதுக்கினாலும், கமலுக்கு திமுக கூட்டணி ஒத்துவருமா? என்று தெரியவில்லை.

காரணம், மநீம முன்னாள் பிரபலம் கோவை மகேந்திரன், தற்போது திமுகவில்தான் முக்கிய பொறுப்பில் உள்ளார். ஒருவேளை, இந்த முறையும் கோவையில், கமல் போட்டியிட நேர்ந்தால், அதே கோவையை சேர்ந்த மகேந்திரன் உள்ளிட்டோர் இறங்கி, கமலுக்காக வேலை பார்ப்பார்களா? என்ற ஐயம் நிலவுகிறதாம்.

கமல்ஹாசன்: இதுவே, அதிமுகவுடன் கமல்ஹாசன் கூட்டணி வைத்தால், கொங்குவின் மணியான தலைவர்களே, மய்யத்துக்காக இறங்கி வேலைபார்ப்பார்கள், மற்ற "தாராளங்களையும்" அவர்களே கவனித்து கொள்வார்களாம். அதனால்தான், மநீமய்யத்துடன் கூட்டணி வைக்க அதிமுக முயல்வதாக தெரிகிறது.

அந்தவகையில், 1+1 சீட்களை ஒதுக்கி, தேர்தல் செலவையும் ஏற்க அதிமுக முன்வந்தால், கமல்ஹாசன் என்ன முடிவெடுப்பார்? அல்லது 1+1 சீட்டுகளை திமுகவும் ஒதுக்க முன்வந்தால் கமல்ஹாசன் என்ன முடிவெடுப்பார்? ராகுல் உட்பட காங்கிரசுடன் நெருக்கத்தில் உள்ள கமல்ஹாசன், அதிமுகவுடன் கூட்டணி வைப்பாரா? திரையுலகில் உதயநிதியுடன் நெருக்கத்தில் உள்ள கமல்ஹாசன், அதிமுகவுடன் கூட்டணி வைப்பாரா? தெரியவில்லை.. பொறுத்திருந்து பார்ப்போம்..!!

# நாட்டிலேயே மிக குறைந்த விலையில் மது எங்கே கிடைக்கும்? தென்னிந்திய மாநிலத்தில் தான் விலை ரொம்ப அதிகம்



சென்னை, அக்.24

இந்தியாவில் எந்தெந்த மாநிலங்களில் மது எத்தனை ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எங்கே குறைந்த விலையில் மது விற்கப்படுகிறது என்பது குறித்து நாம் பார்க்கலாம். மது குடிப்பது உடல்நலத்திற்குக் கெடு என்பதை வல்லுநர்கள் தொடர்ந்து எச்சரித்தே வருகிறார். குறைந்த அளவில் மது குடித்தாலும் சோஷியல் டிரிங்க் எனப்படும் அவ்வப்போது மது குடித்தாலும் அது ஆபத்து என்பதை அவர்களின் எச்சரிக்கை. இருப்பினும், இந்தியாவில் மது குடிப்போரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தே வருகிறது. இதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகிறது. இதற்கிடையே இந்தியாவில் எந்தெந்த மாநிலங்களில் மது எந்தெந்த விலைகளில் விற்கப்படுகிறது என்பது குறித்துப் பார்க்கலாம்.

நம்மூரில் கிட்டகட்ட அனைத்து இளைஞர்களின் ட்ரீம் டிரிப் என்றால் அது கோவா தான். கோவாவில் சுற்றிப் பார்க்க ஏகப்பட்ட இடங்கள் இருக்கிறது என்பது மட்டும் இதற்கான காரணம் இல்லை. அங்கே மதுவும் மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கும் இளசுகள் அங்கே கூட்டமாகக் குவிய இதுவும் ஒரு காரணம். இந்தியாவிலேயே அங்கு தான் மது பானம் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறதாம். மது வகைகளுக்கு அங்கே மிகக் குறைவான வரி விதிக்கப்படுவதே இதற்குக் காரணமாகும். அதேநேரம் நமது அண்டை மாநிலமான கர்நாடகாவில் தான் வரி விகிதம் அதிகமாக இருக்கிறது. இது தொடர்பான இந்திய இன்டர்நேஷனல் ஸ்பிரிட்ஸ் அண்ட் ஒயின்ஸ் அசோசியேஷன் ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது. அதில் தான் கோவாவில் குறைந்த விலைக்கு மது விற்பனை செய்யப்படுவது தெரிய வருகிறது. என்ன காரணம்: கோவாவில் வெறும் 100 ரூபாய்க்கு விற்கப்படும் மதுவகைகள்.. கோவாவுக்கு அடுத்தபடியாக டெல்லியில் 134 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதேபோல ஹரியானா உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதே மது வகைகள் முறையே ரூ. 147 மற்றும் 197 ரூபாய்க்கு விற்பனைக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே மது வகைகள் கர்நாடகாவில் ரூ 513க்கு விற்பனை செய்யப்படுகிறது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

அங்கே வரி எல்லாம் வசூலிக்க மாட்டார்களா என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். உண்மையில் கோவாவில் மதுவுக்கு 49% வரி வசூலிக்கப்படுகிறது. மற்ற மாநிலத்தில் இதைவிட அதிக வரி வசூலிக்கப்படுவதாலேயே கோவாவில் மது விலை குறைவாக இருக்கிறது. எங்கே அதிகம்: கோவாவில் ரூ.100 ரூபாய்க்கு விற்கப்படும் மது வகைகள் மகாராஷ்டிராவில் 226 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதற்கு 71% வரி வசூலிக்கப்படுவதே காரணமாகும். அதேபோல தெலுங்கானாவில் அதே மது வகைகள் 246 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதில் அதிகபட்சமாக நமது அண்டை மாநிலமான கர்நாடகாவில் தான் வரி விகிதம் அதிகமாக இருக்கிறது. அங்கே 83% வரி வசூலிக்கப்படுவதால் மது விலை ரூ.513க்கு செல்கிறது. இது உள்நாட்டில் விற்பனை செய்யப்படும் மது வகைகளுக்கான வரியாகும். அதே நேரம் வெளிநாட்டு மதுக்களுக்கு 150% கூடுதல் வரியும் சேர்கிறது. இதன் காரணமாகவே நீண்ட காலமாக வரியைக் குறைக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறது. இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய யூனியனில் உள்ள மது நிறுவனங்கள் அந்த நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள ஓப்பன் வர்த்தக ஒப்பந்தம் மூலம் மதுவுக்கான இறக்குமதி வரியைக் குறைக்க வேண்டும் என முயன்று வருவது குறிப்பிடத்தக்கது. வரி விகிதம்: இந்தியாவில் இப்போது ஜிஎஸ்டி வரி விதிப்பு அமலில் உள்ளது. மது மற்றும் பெட்ரோலிய பொருட்களைத் தவிர அனைத்தும் ஜிஎஸ்டி வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. ஜிஎஸ்டிக்கு பிறகு மாநில அரசால் நேரடியாக வரிகளை விதிக்க முடியாத நிலையில், மது, பெட்ரோல் டீசல் மற்றும் சொத்து வரி உள்ளிட்ட சில விஷயங்களில் மட்டும் மாநில அரசால் வரி விதிக்க முடியும். பெட்ரோலிய பொருட்களை ஜிஎஸ்டி வரம்பிற்குள் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கைகள் இருக்கும் போதிலும், மதுவை ஜிஎஸ்டிக்குள் கொண்டு வர வேண்டும் என்ற பேச்சே இருப்பதில்லை. மாநில அரசின் செலவுகள் அதிகரிப்பதாலும் ஜிஎஸ்டி மூலம் கிடைக்கும் தொகை குறைவதுமே மாநில அரசுகள் மது வகைகளில் வரியை உயர்த்த கரணமாகும்.

# ஜவ்வாதுமலைத் தொடரில் அமிர்தி பூங்கா திறப்பு

வேலூர், அக். 24

வேலூரிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் அமிர்தி வன உயிரியல் பூங்கா உள்ளது. இது ஜவ்வாதுமலைத் தொடரில் சிறிய விலங்குகள் சரணாலயமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த பூங்காவில் மான்கள், கீரிப் பிள்ளைகள், குள்ளநரிகள், குரங்குகள், சிவப்புத்தலை கிளிகள், காதல் பறவைகள், ஆமைகள், மயில்கள், முதலைகள், காட்டுப் பூனைகள், கழுகு, வாத்துகள், புறாக்கள், காட்டுக் கிளிகள், முயல்கள், மலைப்பாம்புகள் உள்ளன. மேலும் பூங்காவில் அடர்ந்து வளர்ந்த மரங்களில் பூத்துக்குலுங்கும் பூக்களை ரசிக்கலாம்.




ஞாயிறு உள்பட மற்ற அனைத்து நாட்களும் பூங்கா திறந்திருக்கும். வேலூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்தவர்கள் மற்றும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து பொழுதை கழித்து விட்டு செல்கின்றனர்.

உயிரியல் பூங்கா பராமரிப்பு பணிக்காக வாரந்தோறும் செவ்வாய்க்கிழமையன்று விடுமுறை விடப்படுவது வழக்கம். அன்றைய தினம் விலங்குகள் பராமரிக்கப்படுகிறது.

இதில் பொங்கல், தீபாவளி, புத்தாண்டு உள்ளிட்ட விடுமுறை நாட்கள் செவ்வாய்க்கிழமையில் வந்தால் அன்று பொதுமக்களின் பார்வைக்காக பூங்கா திறந்து வைக்கப்பட்டுகிறது.

அதன்படி நாளை (செவ்வாய்க்கிழமை) விஜயதசமி தினத்தன்று பூங்கா வழக்கம் போல் செயல்படும் என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்: திமுக அனைத்து அணி செயலாளர்கள் கூட்டம்

சென்னை, அக். 24

"நீட்" தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை மத்திய அரசுக்கு உணர்த்தும் வகையில், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில், தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் "நீட் விலக்கு, நம் இலக்கு" எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை கடந்த 21102023 சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு கையெழுத்து இயக்கத்தை தொடக்கி வைத்து முதல் கையெழுத்திட்டார்.




இந்நிலையில், நீட் தேர்வு விலக்கினை மக்கள் போராட்டமாக மாற்றும் வகையில், இக்கையெழுத்து இயக்கத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக, தமிழ்நாட்டில் உள்ள குக்கிராமம் முதல் பட்டணக்கரை கொண்டு சென்றிட ஏதுவாக, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில், இன்று மாலை 6.30 மணியளவில், "தி.மு.க.கழகத்தின் அனைத்து அணிச் செயலாளர்கள் கூட்டம்" காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் என அறிவிப்பு வெளியாகி உள்ளது.

# உயர்கல்வி படிப்புக்கு உடனடியாக கடன் வழங்க வேண்டும்



நீலகிரி, அக். 24

நீலகிரி மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கூட்டம் ஊட்டியில் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதற்கு கலெக்டர் அருணா தலைமை தாங்கினார். அப்போது அவர் வங்கி அதிகாரிகளிடம் பேசியதாவது:

நீலகிரி மாவட்டத்தில், பல்வேறு நபர்கள் கடனுதவிகள் பெற வங்கிகளை நாடிவரும்போது, கடன் விண்ணப்பங்கள் பெற்றவுடன் சம்மந்தப்பட்ட வங்கி நிறுவனங்கள் உடனடியாக அந்த விண்ணப்பங்களை பரிசீலனை செய்து, கடன் வழங்க முன்வர வேண்டும்.

குறிப்பாக உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகள் கல்விக்கடன் பெற வங்கியில் விண்ணப்பித்தால், அதை காலதாமதமின்றி விரைவில் பரிசீலனை செய்து, கடன் வழங்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், எந்தவொரு விண்ணப்பங்களும் உரிய காரணங்கள் இல்லாமல் நிராகரிக்கக் கூடாது. ஒவ்வொறு துறைகளின் வாயிலாக அரசால் செயல்படுத்தப்பட்டுவரும்திட்டங்கள் குறித்து, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பொதுமக்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டும். அதேபோல் ஒவ்வொரு துறைகளுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை எட்டும் வகையில், துறை அலுவலர்கள் திறம்பட செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில், தோட்டக்கலைத்துறை இணைஇயக்குநர்ஷிபிலா மேரி, ஆவின் பொது மேலாளர் ஜெயராமன், உதவி பொது மேலாளர் (ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா) அமிர்தவள்ளி, உதவி பொது மேலாளர் (நபார்டு) திருமலைராவ், தாட்கோ மேலாளர் ரவிச் சந்திரன், உதவி இயக்குநர் (வாழ்ந்து காட்டுவோம் திட்டம்) ரமேஷ் கிருஷ்ணன், மாவட்ட தொழில் மைய மேலாளர் சண்முக சிவா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சசிகுமார் சக்கரபாணி, மகளிர் திட்டம் உதவி திட்ட அலுவலர் குமாரவேல், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# சிறப்பு மலை ரெயிலில் சுற்றுலா பயணிகள் உற்சாக பயணம்



நீலகிரி, அக். 24

தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களில் உள்ள பொதுமக்கள் சுற்றுலா செல்ல முடிவு செய்தால் அதில் நீலகிரி மாவட்டம்முதலிடம்வகிக்கிறது. இங்கு வளைந்து நெளிந்து செல்லும் சாலைகளும், வானுயர ஓங்கி வளர்ந்து காணப்படும் மலைகள் மற்றும் மரங்களும் அவர்களை சுண்டி இழுக்கின்றன.

இந்த நிலையில் சனி, ஞாயிறு வார விடுமுறை மற்றும் ஆயுத பூஜை, விஜயதசமி பண்டிகையை ஒட்டி 4 நாட்கள் தொடர் விடுமுறை விடப்பட்டுள்ளதால் நீலகிரிக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

நீலகிரிக்கு வரும் வட மாநில சுற்றுலா பயணிகள், யுனெஸ்கோ அந்தஸ்துபெற்றநீலகிரிமலை ரெயிலில் பயணம் செய்ய அதிக ஆர்வம் காட்டுவார்கள். இதனால் மலைரெயிலில் டிக்கெட் முன்பதிவு செய்வதில் சுற்றுலா பயணிகளிடம் அதிக அளவில் போட்டி இருக்கும். இதை கருத்தில் கொண்டு கோடை சீசனுக்கு இயக்கப்பட்டதை போல் ஆயுத பூஜை மற்றும் தீபாவளி பண்டிகையை ஒட்டி சிறப்பு ரெயில் இயக்கப்படும் என்று ரெயில்வே நிர்வாகம் அறிவித்து இருந்தது.

இதன்படி நேற்று வந்த சிறப்பு மலை ரெயிலில் சுற்றுலா பயணிகள் உற்சாகமாக பயணம் செய்தபடி வந்தனர். அவர்கள் வரும் வழியில் இருந்த குகைகள் மற்றும் இயற்கை காட்சிகளை கண்டு ரசித்தனர்.

இதேபோல் ஊட்டி ரெயில் நிலையத்திற்கு வந்த சுற்றுலாப் பயணிகள் அங்கிருந்த 'ஐ லவ் ஊட்டி' என்ற லோகோ அருகே நின்று புகைப்படம் மற்றும் செல்பி எடுத்து மகிழ்ச்சியடைந்தனர். மேலும் அந்த படங்களை சமூக வலைதளங்களில் பதிவிட்டனர். இதேபோல் நேற்று ஊட்டி தாவரவியல் பூங்கா புல்வெளி மைதானத்தை சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் சுற்றி பார்த்து மகிழ்ந்தனர். அப்போது அங்கிருந்த மலர் அலங்காரங்களை கண்டு ரசித்தனர். மேலும் ஊட்டி ஏரியில் உற்சாகமாக படகு சவாரி செய்தனர். தென்னிந்தியாவின் மிக உயர்ந்த மலை சிகரமான தொட்டபெட்டா சென்று அங்கு இருந்த இயற்கை காட்சிகளை கண்டு ரசித்தனர்.

இதேபோல் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிக அளவில் இருந்தது. சுற்றுலா பயணிகள் வருகையால் மாவட்டத்தில் நேற்று போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தது. மேலும் தற்போது மழை குறைந்து இதமான காலநிலை நிலவுவதால் சுற்றுலாபயணிகள்மகிழ்ச்சியுடன் ஊட்டியை வளம் வருகின்றனர்.மேலும் ஒரு சிலர் தங்கும் விடுதிகளில் அறை கிடைக்காததால் சிரமம் அடைந்தனர்.

# கோபி நந்த கோகுலத்தில் மண்டல பூஜை நிறைவு விழா



ஈரோடு, அக். 24

கோபி கோடீஸ்வரர் நகரில் உள்ள நந்த கோகுலத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, சமேத சகஸ்ர நாம பெருமாள், ராதிகா சமேத நந்தகோபால், ருக்மாயி சமேத பாண்டுரங்கன் ஆகிய தெய்வங்களுக்கு மண்டல பூஜை நிறைவு விழா நடந்தது. இதை முன்னிட்டு சாந்தி ஹோமம், பரிகார ஹோமம், சுதர்சன ஹோமம் செய்யப்பட்டது.

பின்னர் அபிஷேகம் செய்யப்பட்டு மகாதீபாராதனை காட்டப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

# தூத்துக்குடியில் பழிக்குப்பழியாக தலையை துண்டித்து தொழிலாளி கொலை

தூத்துக்குடி, அக். 24

தூத்துக்குடி அண்ணாநகர் பகுதியில் சலவைக்கூடம் அமைந்துள்ளது. இங்குள்ள விநாயகர் கோவில் முன்பு நேற்று காலை ரத்தக்கறையுடன் ஒரு பை கிடந்தது. அந்த வழியாக சென்ற மக்கள் பையை பார்த்துள்ளனர். அதில் மனித தலை இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்து போலீசுக்கு தகவல் தெரிவித்தனர்.



உடனே போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தலையை கைப்பற்றினர்.

அந்த பகுதியில் உடல் கிடக்கிறதா? என்று போலீசார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். ஆனால் அங்கு கிடைக்கவில்லை.

தூத்துக்குடி 4வது கேட் அமைந்துள்ள மையவாடி பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் உடல் கிடப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. போலீசார் விரைந்து சென்று உடலை கைப்பற்றினர். உடலில் ஒரு சில இடங்களில் வெட்டுக்காயங்கள் இருந்தன. உடனடியாக போலீசார் தலை மற்றும் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்கள்.

மேலும், அவர்கள் நடத்திய விசாரணையில், கொலை செய்யப்பட்டவர் தூத்துக்குடி மில்லர்புரம் ஹவுசிங் போர்டு காலனியை சேர்ந்த சண்முகத்தின் மகன் சுமை தூக்கும் தொழிலாளியான மாரியப்பன் (வயது 42) என்பது தெரியவந்தது.

இவர் கடந்த 23.4.23 அன்று அண்ணாநகர் சலவைக்கூடத்தில், தனது நண்பர் அண்ணாநகரை சேர்ந்த சுப்பையா மகன் சப்பாணிமுத்து (43) என்பவருடன் மது குடித்துள்ளார்.

அப்போது சப்பாணி முத்து, மாரியப்பன் கழுத்தில் அணிந்து இருந்த மாலையை அறுத்து விட்டதாகவும், அவரது தாயை பற்றி அவதூறாக பேசியதாகவும் கூறப்படுகிறது.

இதில் அவர்களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில், மாரியப்பன் அருகில் கிடந்த கல்லை தூக்கி தலையில் போட்டு சப்பாணிமுத்துவை கொலை செய்து விட்டு போலீஸ் நிலையத்தில் சரண் அடைந்தார். கைதான அவர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு பாளையங்கோட்டை ஜெயிலில் அடைக்கப்பட்டு இருந்தார்.

இந்தநிலையில் மாரியப்பன் சமீபத்தில் ஜாமீனில் வெளியே வந்தார். இதனை கண்காணித்த சப்பாணிமுத்துவின் ஆதரவாளர்கள் பழிக்குப் பழியாக மாரியப்பனை கொலை செய்ய திட்டமிட்டனர்.

மாரியப்பன் மையவாடி பகுதியில் இயற்கை உபாதையை கழிக்க சென்றார். அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் 3 பேர், மாரியப்பனை சரமாரியாக அரிவாளால் வெட்டினர். பின்னர் அவரது தலையை துண்டித்தனர். அந்த தலையை சப்பாணிமுத்து கொலை செய்யப்பட்ட அண்ணாநகர் சலவைக்கூடத்தில் உள்ள விநாயகர் கோவில் முன்பு வைத்து விட்டு சென்று இருப்பது தெரியவந்தது.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து கொலையாளிகளை வலைவீசி தேடி வருகின்றனர்.

பழிக்குப்பழியாக தொழிலாளி தலை துண்டித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் தூத்துக்குடியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஈரோட்டில் புரட்சிகர இளைஞர் முன்னணியினர் ஆர்ப்பாட்டம்




ஈரோடு, அக். 24

ஈரோடு சூரம்பட்டி நால்ரோடு பகுதியில் புரட்சிகர இளைஞர் முன்னணி சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயபிரகாசம் தலைமை தாங்கினார். திராவிடர் கழக பொறுப்பாளர் சண்முகம், திராவிடர் விடுதலை கழக அமைப்பாளர் ரத்தினசாமி, தமிழ் புலிகள் கட்சி மாவட்ட செயலாளர் சிந்தனை செல்வன், மக்கள் உரிமைக்கழக ஒருங்கிணைப்பாளர் கண் குறிஞ்சி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இதில் பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் போரை நிறுத்த வேண்டும், இஸ்ரேல் அரசுக்கு மத்திய அரசு துணை நிற்கக்கூடாது, இஸ்ரேல் அரசுடனான பொருளாதார ஒப்பந்தத்தை இந்தியா திரும்ப பெற வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில் புரட்சிகர இளைஞர் முன்னணி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழகத்தின் 7 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, அக். 24

தமிழகத்திற்கு அதிக மழைப்பொழிவை தருகின்ற வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. இதற்கிடையில், வங்கக்கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி, காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது.

இந்த நிலையில், தமிழகத்தின் 7 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. அதாவது, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. மேலும், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 6 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், சென்னையில் 2 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# கலியுக சிதம்பரேஸ்வர் கோவிலில் மண்டல பூஜை

திண்டுக்கல், அக். 24

வத்தலக்குண்டு அருகே பூசாரிபட்டி வஞ்சிஓடை நதிக்கரையில் பிரசித்தி பெற்ற கலியுக சிதம்பரேஸ்வரர் கோவில் உள்ளது. சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும் எழுந்தருளியுள்ளனர். இந்த கோவிலில் கடந்த மாதம் 4ந்தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து தினசரி மண்டல பூஜை நடந்தது.



இந்தநிலையில் நேற்று 48வது நாள் மண்டல பூஜை நிறைவு விழா நடந்தது. இதையொட்டி பல்வேறு புண்ணிய தலங்களில் இருந்து எடுத்துவரப்பட்ட புனித நீர் கொண்டு மூலவர் கலியுக சிதம்பரேஸ்வரர், மகா விஷ்ணு, கன்னிமூல கணபதி, சிவகாமி அம்மாள், சுப்ரமணியர், வள்ளிதெய்வானை, பிரம்மா, விருமாண்டி, துர்க்கை, பேச்சியம்மன், ராக்காச்சி அம்மன் ஆகிய தெய்வங்களுக்கு 48வது நாள் மண்டல அபிஷேகம், சிறப்பு பூஜை நடைபெற்றது.

மேலும் நிறைவு நிகழ்ச்சியாக 108 சங்காபிஷேகம் நடைபெற்றது. பூஜைகளை தலைமை பூசாரி சுந்தர்தலைமையில்பூசாரிகள் செய்தனர். இதில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# பழனியில் வில் அம்பு எய்து மகிஷா சூரவதம்

திண்டுக்கல், அக். 24

பழனி முருகன் கோவில் மற்றும் பெரியநாயகி அம்மன் கோவிலில் நவராத்திரி விழா கடந்த 15ந்தேதி காப்புக்கட்டுதலுடன் தொடங்கியது. விழாவையொட்டி தினமும் முத்துக்குமாரசுவாமி வள்ளிதெய்வானை, பெரியநாயகி அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் நடைபெற்றது. மேலும் மாலையில் சிறப்பு கலை நிகழ்ச்சிகளும் நடந்து வருகிறது. நவராத்திரி விழாவின் சிகர நிகழ்ச்சியாக வில் அம்பு போடுதல், மகிஷாசூர வதம் நிகழ்ச்சி இன்று (திங்கட்கிழமை) பழனி கோதைமங்கலத்தில் நடைபெறுகிறது. இதையொட்டி பழனி முருகன் கோவிலில் இன்று பூஜை முறைகள் மாற்றப்பட்டு உள்ளன. அதாவது பகல் 12 மணிக்கு உச்சிக்கால பூஜை நடக்கிறது. அதையடுத்து 5.30 மணிக்கு நடைபெறும் சாயரட்சை பூஜை மதியம் 1.30 மணிக்கே நடக்கிறது. பின்னர் மாலை 3 மணிக்கு மலைக்கோவிலில் இருந்து பராசக்திவேல் பெரியநாயகி அம்மன் கோவிலுக்கு புறப்பாடாகி செல்கிறது. அதையடுத்து கோவில் நடை அடைக்கப்படுகிறது. எனவே பகல் 11 மணிக்கு பிறகு பக்தர்கள் மலைக்கோவிலுக்கு செல்ல அனுமதி இல்லை.



பின்னர் பெரியநாயகி அம்மன் கோவிலில் இருந்து மாலை 5 மணிக்கு முத்துக்குமாரசுவாமி தங்கக்குதிரை வாகனத்தில் எழுந்தருளி கோதைமங்கலம் செல்கிறார். மாலை 6 மணிக்கு மேல் வில் அம்பு போடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அப்போது முத்துக்குமார சுவாமி வில் அம்பை எய்து மகிஷாசூரனை வதம் செய்கிறார். பின்னர் மீண்டும் முத்துக்குமாரசுவாமி பெரியநாயகி அம்மன் கோவிலுக்கு திரும்ப வருகிறார். அதையடுத்து அங்கு அர்த்தசாம பூஜை நடைபெறுகிறது. தொடர்ந்து பராசக்தி வேல் மீண்டும் பழனி முருகன் கோவிலுக்கு வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதன்பின்னர் கோவில் நடை திறக்கப்பட்டு சுவாமிக்கு சிறப்பு பூஜை நடைபெறுகிறது. இதையடுத்து வழக்கம் போல் முருகன் கோவில் நடை திறக்கப்பட்டு 6 கால பூஜைகள் நடைபெறுகிறது. மேலும் நவராத்திரி விழாவையொட்டி நிறுத்தப்பட்ட தங்கரத புறப்பாடு நாளை முதல் மீண்டும் தொடங்குகிறது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# சென்னை மக்களுக்கு செம ஹேப்பி நியூஸ் மேயர் பிரியா சொன்ன சூப்பர் பதில்



சென்னை, அக். 24

மீஞ்சூர்அருகேநிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட சென்னை மேயர் பிரியா, சென்னை மக்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் சிலமுக்கியகருத்துகளைத் தெரிவித்தார். திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் அருகே நாப்பாளையம் பகுதியில்நிகழ்ச்சிஒன்றில் கலந்து கொள்ள மேயர் பிரியா வந்திருந்தார். அப்போது அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மேயர் பிரியா அங்கிருந்து புறப்படத் தயாரானார். அவரது கார் கிளம்பிவிட்ட நிலையில், அப்போது அவரிடம் செய்தியாளர்கள் சில கேள்விகளைக் கேட்க.. உடனடியாக காரில் இருந்து இறங்கிய மேயர் பிரியா சில முக்கிய கருத்துகளைத் தெரிவித்தார். Chandrayaan 3 விண்கலம் நிலவில் வெடி சிதற வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் தகவல் | Oneindia Tamil மேயர் பிரியா: மீஞ்சூர் பகுதியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் சென்னை மேயர் பிரியா கலந்து கொண்டார். அந்த நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு மேயர் பிரியா காரில் இருந்து கிளம்பத் தயாரானார். அப்போது அவரிடம் செய்தியாளர்கள் மழை குறித்தும் வெள்ளத்தைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ளநடவடிக்கைகள்குறித்தும்கேள்விகளை முன்வைத்தனர். அப்போது உடனடியாக காரில் இருந்து இறங்கிய சென்னை மேயர் பிரியா சிலமுக்கியகருத்துகளைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் கூறுகையில், "நான் ஏற்கனவே நிறைய முறை இந்தப் பகுதியில் ஆய்வுக்கு வந்துள்ளேன். இந்தப் பகுதியில் வெள்ளம் ஏற்படாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். பெரும்பாலான பணிகள் முடிந்து விட்டன. மீதமுள்ள பணிகளை விரைவில் முடிக்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம். இந்தப்பகுதியில்மழைநீர் தேங்காமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. ஹேப்பி நியூஸ்: இது மட்டுமின்றி சென்னை மாநகராட்சி சார்பில் சென்னையில் அனைத்து பகுதிகளிலும் வெள்ள தடுப்பு நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது. வெள்ளதடுப்பு பணிகளைக் கண்காணிக்க ஒவ்வொரு பகுதியிலும் கூடுதலாக 10 பேரை நியமித்துள்ளோம். வெள்ள தடுப்பு பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள அரசு ஊழியர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம். தண்ணீர் தேங்கினால் அதை உடனடியாக வெளியேற்றக் கூடுதலாக மோட்டர்களை தயார் நிலையில் வைக்கச் சொல்லியுள்ளோம்.

மழை வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர்களை ஒரு அளவுக்கு மட்டுமே நம்மால் கட்டுப்படுத்த முடியும். ஒரு மணி நேரத்தில் 10 செமீ மீழை பெய்தால் மழை சில இடங்களில் தேங்கலாம். அப்படித் தேங்கினாலும் மழை நின்று ஒரு மணி நேரத்தில் மழை நீரை அப்புறப்படுத்தஅனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கப்படும்" என்று அவர் தெரிவித்தார். வடகிழக்கு பருவமழை: விரைவில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளது. வழக்கமாக அக். முதல் டிசம்பர் மாதம் வரை இந்த வடகிழக்கு பருவமழை இருக்கும். தலைநகர் சென்னையில் பொதுவாக இந்த வடகிழக்கு பருவமழை காலத்தில் தான் அதிக மழை பெய்யும். கடந்த காலங்களில் பல முறை வடகிழக்கு பருவமழை காலத்தில் சென்னையில் சாலைகளில் மழைநீர் தேங்கியுள்ளது. இதனால் மழை சீசன் என்றாலே அச்சப்படும் அளவுக்கே நிலைமை இருந்தது. இப்போது சென்னையில் மழைநீர்வடிகால்பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.பலஇடங்களில் இந்த மழைநீர் வடிகால் பணிகள் முடிந்துவிட்டதாகவும் சில இடங்களில் மட்டும் பணிகள் பாக்கி இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இந்தச் சூழலில் தான் மழைநீர்வடிகால்பணிகள் குறித்து மேயர் பிரியா ராஜன் இந்தக் கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

# தேனியில் சிக்கிய இம்ரான் கான்.. 38 இலங்கை மக்களை தமிழகம் வழியாக கர்நாடகா கடத்தியது அம்பலம் என்ஐஏ




பெங்களூர், அக். 24

தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் நேற்று கைது செய்யப்பட்ட முகமது இம்ரான் கான் குறித்து பெங்களூர் என்ஐஏ ஆள்கடத்தல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் முக்கிய தகவல்களை வெளியிட்டுள்ளனர். அவர் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய ஒரு நபருடன் சேர்ந்து இலங்கையில் இருந்து 38 பேரை தமிழகம் வழியாக கர்நாடகாவுக்கு அனுப்பி வைத்த திடுக்கிட வைக்கும் தகவல் வெளியாகி உள்ளது.

தமிழகத்தின் ராமநாதபுரத்தை சேர்ந்தவர் முகமது இம்ரான் கான். இவர் மீது பல குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஆள்கடத்தல் தொடர்பான வழக்கும் நிலுவையில் உள்ளது. இவரை என்ஐஏ அதிகாரிகள் கண்காணித்து வந்தனர்.

ஆனால் கடந்த 2021ம் ஆண்டில்அவர்திடீரென்று மாயமானார். இந்நிலையில் தான் தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் அவரை என்ஐஏ அதிகாரிகள் நேற்று அதிரடியாக கைது செய்தனர்.

முதலில் அவர் ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாத அமைப்புக்கு ஆட்சேர்த்ததாக தகவல்கள் வெளியாகின. மேலும் இளைஞர்களை மூளைச்சலவை செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பியதாகவும், இலங்கை வழியாக இந்தியாவுக்கு சட்டவிரோதமாக ஆட்களை கடத்தி வந்ததாகவும் தகவல்கள் பரவின.

இந்நிலையில் கைதான முகமது இம்ரான் கான் குறித்த தகவல்கள் வெளியாகி உள்ளன. அதாவது கர்நாடகா மாநிலம் மங்களூரில் இலங்கையை சேர்ந்தவர்கள் உரிய ஆவணங்கள் இன்றி வசித்து வந்தனர். இதுதொடர்பாக மங்களூர் தெற்கு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதையடுத்து அவர்கள் எப்படி இந்தியாவுக்கு வந்தனர் என்பது பற்றி போலீசார் விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணையின்போது தமிழ்நாட்டின் ராமநாதபுரத்தை சேர்ந்த முகமது இம்ரான் கான் என்பவர் தான் உதவியது தெரியவந்தது. இதையடுத்து முகமது இம்ரான் கானை என்ஐஏவின் ஆள்கடத்தல் தடுப்பு பிரிவு பிடிக்க முயன்றது.

இதுபற்றி அறிந்த முகமது இம்ரான் கான் தலைமைறைவானர். 2021 முதல் அவர் மாயமானார். இதையடுத்து அவரை என்ஐஏ அதிகாரிகள் தீவிரமாக தேடிவந்தனர்.

இந்நிலையில் தான் தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் அவரை நேற்று கைது செய்தனர். தற்போதைய விசாரணையின்படி 38 பேரை அவர் இலங்கையில் இருந்து கள்ளப்படகில் ராமநாதபுரம் வரவழைத்து அங்கிருந்து கர்நாடகாவின் பெங்களூர் வழியாக மங்களூருவுக்கு அனுப்பியது தெரியவந்தது. இதுபற்றி என்ஐஏ விளக்கம் அளித்துள்ளது.

அதில், இம்ரான் கான் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய ஈசன் என்ற இலங்கை நாட்டை சேர்ந்தவருடன்இணைந்து செயல்பட்டு வந்துள்ளார். இலங்கையை சேர்ந்த 38 பேரை அங்கிருந்து சட்ட விரோதமாக இந்தியாவுக்கு அழைத்து வந்துள்ளார். கனடாவுக்கு அனுப்பி வைப்பதாகவும், வேலை வாய்ப்பு வழங்குவதாகவும் கூறி ஏமாற்றி இந்தியாவுக்கு அழைத்து வந்துள்ளனர். சர்வதேச அளவில் மனிதர்களை கடத்தும் விவகாரத்தில் முகமது இம்ரான்கானுக்கு தொடர்பு இருந்தது. இவர் இலங்கையை சேர்ந்தவர்களை இந்தியா உள்பட பிற நாடுகளுக்கு கடத்தும் பணியில்தொடர்புகொண்டுள்ளார்'' எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

# காந்தியையும் சாதி சங்க தலைவராக்கி இருப்பார்கள்.. ஆளுநர் ஆர்.என். ரவி



திருச்சி, அக். 24

காந்தி உள்ளிட்டோர் தமிழ்நாட்டில் பிறந்திருந்தால் அவர்களையும் சாதி சங்க தலைவராக மாற்றியிருப்போம் என்றும்சுதந்திரபோராட்ட தியாகிகளைமக்கள்நினைவில் இருந்து அகற்ற தமிழக அரசு முயற்சி செய்கிறது என்று தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கடுமையாக சாடியுள்ளார்.

மருது சகோதரர்கள் நினைவு நாள் நிகழ்ச்சி திருச்சியில் நடந்தது. இதில் தமிழக ஆளுநர் ஆர். என். ரவி கலந்து கொண்டார். அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் ஆரியம் திராவிடம் கிடையாது. தமிழகம் புண்ணிய பூமி. இந்தியாவை பிரித்தாளும் கொள்கைக்காகவே கால்டுவெல் போன்றோர் இந்தியா அனுப்பி வைக்கப்பட்டனர். சுதந்திர தினத்தை கருப்பு நாள் என்று கூறியவர்கள் தமிழ்நாட்டில் தான் இருக்கின்றார்கள்.

சிவகங்கையில் 144 தடை உத்தரவு போட்டிருக்கிறார்கள். அக்டோபர் 23ம் தேதி முதல் 31ம் தேதி வரை மக்கள் இயல்பாக நடமாட தமிழக அரசு தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறது. மருது சகோதரர்களின் தியாகம் மக்களால் கொண்டாடப்படக்கூடாது என தமிழகஅரசுநினைக்கிறது. அரசியல் கட்சி தலைவரின் நினைவு தினத்தில் அரசால் இப்படி தடை போட முடியுமா?..

சுதந்திர போராட்ட தியாகிகளை மக்கள் நினைவிலிருந்து அகற்றுவதற்கு தமிழக முயற்சிக்கிறது. காந்தி உள்ளிட்டோர் தமிழகத்தில் பிறந்திருந்தால் அவர்களையும் சாதி சங்க தலைவர்களாக மாற்றியிருப்பர். தியாகிகளை சாதி தலைவர்களாக அடையாளப்படுத்தி மக்கள ஒன்று சேர விடாமல் தடுக்கின்றனர்.

இவ்வாறு ஆளுநர் ரவி கூறினார்.

# 'வந்தே பாரத்'க்காக பிற ரயில்கள் தாமதம்.. கேரளாவில் மனித உரிமைகள் ஆணையம் போட்ட அதிரடி ஆர்டர்! பின்னணி



திருவனந்தபுரம், அக். 24

வந்தே பாரத் ரயிலுக்காக பிற ரயில்கள் நிறுத்தப்படுவது பயணிகளின் உரிமையை மீறும் செயல் என்றும் இது தொடர்பாக ரயில்வே உரிய விளக்கத்தை அளிக்க வேண்டும் எனவும் கேரள மனித உரிமைகள் ஆணையம் ரயில்வே நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

ரயில் பயணிகளின் வசதியை மேம்படுத்தும் விதமாக நாடு முழுவதும் வந்தே பாரத் ரயில்களை ரயில்வே அறிமுகம் செய்து வருகிறது. சென்னை நெல்லை, சென்னை கோவை உள்பட நாடு முழுவதும் 33 வந்தே பாரத் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. வந்தே பாரத் ரயில்களை பொறுத்தவரை தற்போது இயக்கப்படும் எக்ஸ்பிரஸ் ரயில்களை விட அதிவேகத்தில் இயக்கப்படுகிறது.

அது மட்டும் இன்றி முழுவதும் ஏசி வசதி, சொகுசான இருக்கைகள், வைஃபை, அகன்ற ஜன்னல்கள் பயணிகளின் பயண அனுபத்தை சொகுசாக்கும் வகையில் பல வசதிகள் உள்ளன. இதனால், வந்தே பாரத் ரயில்களில் பயணம் செய்ய பயணிகளும் அதிகம் விரும்புகின்றனர். எனினும், வந்தே பாரத் ரயிலுக்காக பிற ரயில்களின் வேகம் குறைக்கப்படுவதாகவும் சில ரயில்களின் நேரமோ மாற்றி அமைக்கப்பட்டு இருப்பதாகவும் பயணிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டாக உள்ளது.


சென்னை நெல்லை வந்தே பாரத் ரயில் சேவை துவங்கியதும் வைகை எக்ஸ்பிரஸ் ரயில் 30 நிமிடங்களுக்கு முன்பே புறப்படும் என்று ரயில்வே அறிவித்தது. இதனால், வந்தே பாரத் ரயிலுக்காக பிற ரயில்களை ரயில்வே காவு கொடுப்பதாக பயணிகள் விமர்சித்து இருந்தனர். கேரளாவிலும் தற்போது இதே மாதிரியான பிரச்சினை வெடித்துள்ளது. அதாவது, வந்தே பாரத் ரயிலுக்காக குறைந்த அளவு தூரம் செல்லும் சில ரயில்களின் நேரத்தை மாற்றி அமைத்து இருப்பதாகவும் இதனால்தங்களுக்குகடும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தினசரி வேலைக்கு செல்லும் பயணிகள் குற்றம் சாட்டினர்.

180 கி.மீ வேகம்.. வந்தே பாரத்துக்கே டஃப் கொடுக்கும் நமோ பாரத் ரயில்! பிரதமர் மோடி தொடங்கி வைத்தார் 180 கி.மீ வேகம்..வந்தே பாரத்துக்கே டஃப் கொடுக்கும் நமோபாரத் ரயில்! பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

இந்த நிலையில், இது தொடர்பாக கேரள மனித உரிமைகள் ஆணையம் வழக்கு பதிவு செய்துள்ளது. இவ்விவகாரம் தொடர்பாக பாலக்காடு ரயில்வே டிவிஷனல் மேனேஜர், பயணிகளின் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் 15 நாட்களில் அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணையத்தின் பொறுப்பு தலைவரும் ஜுடிசியல் உறுப்பினருமான கே பைஜூ நாத் அதிரடி உத்தரவிட்டுள்ளார்.

வந்தே பாரத் ரயில் இடையூறு இன்றி இயங்குவதற்காக பரசுராம் எக்ஸ்பிரஸ் ரயில் கோழிக்கோட்டில் சுமார் 1.30 மணி நேரம் கூடுதலாக நிறுத்தப்படும் என ரயில்வே அட்டவணை மாற்றி அமைக்கப்பட்டது. அதேபோல், கன்னூர் கோழிக்கோடு பயணிகள் ரயில் பல ரயில் நிலையங்களில் வந்தே பாரத் இடையூறு இன்றி செல்வதற்காக நிறுத்தப்படுகிறது.

# நீட்டில் மாணவர்கள் சந்தித்த அதே பிரச்சனை.. ஆசிரியர்களுக்கு தொடரும் நெருக்கடி: ராமதாஸ் கோரிக்கை




சென்னை, அக். 24

ஆசிரியர் பணிக்கான வயது வரம்பு உயர்வை வரவேற்று உள்ள பாமக நிறுவனர் ராமதாஸ், தகுதித் தேர்வில் வென்றோருக்கு போட்டித்தேர்வு ரத்து எப்போது என கேள்வி எழுப்பி உள்ளார். இதுகுறித்து அவர் விடுத்து உள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் அரசு பள்ளி ஆசிரியர் பணிக்கான அதிகபட்ச வயது வரம்பை பொதுப்பிரிவினருக்கு 40லிருந்து 53 ஆகவும், இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு 45 லிருந்து 58 ஆகவும் உயர்த்தி தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. தகுதித் தேர்வில் வெற்றி பெற்று ஆசிரியர் பணிக்காக காத்திருக்கும் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரிகளின் கோரிக்கையை ஏற்று இந்த நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில் இது மட்டுமே போதுமானது அல்ல. காசாவுக்கு ஆதரவாக நின்ற கிரேட்டா தன்பர்க்.. எரிச்சலடைந்த இஸ்ரேல்! பாட புத்தகத்தில் அதிரடி மாற்றம் தமிழ்நாட்டில் ஆசிரியர் பணிக்கான தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்கள், தங்களுக்கு போட்டித் தேர்வு நடத்தாமல் நேரடியாக ஆசிரியராக நியமிக்க வேண்டும்; ஆசிரியர் பணிக்கான வயது வரம்பை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கடந்த செப்டம்பர் 27ஆம் தேதி முதல் சென்னையில் தொடர் போராட்டங்களை நடத்தினார்கள். அவர்களுடன் பேச்சு நடத்திய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் வயது வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. ஆனாலும், அவர்களின் முதன்மை கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இடைநிலை, பட்டதாரி ஆசிரியர் பணிக்கு இரு தேர்வுகள் கூடாது; ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்களை, போட்டித் தேர்வு நடத்தாமல், நேரடியாக பணியமர்த்த வேண்டும் என்பது தான் அவர்களின் முதன்மைக் கோரிக்கை ஆகும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதில் தமிழக அரசுக்கு எந்த சிக்கலும் இல்லை. ஒரே ஓர் அரசாணை பிறப்பிப்பதன் மூலம் இந்தக் கோரிக்கையை தமிழக அரசு நிறைவேற்றலாம். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதால் தமிழக அரசுக்கு நிதி சார்ந்த செலவுகள் எதுவும் ஏற்படப்போவதில்லை. ஆனாலும் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு தயங்குவது ஏன்? எனத் தெரியவில்லை. 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு அதன் தரவரிசை அடிப்படையில் ஆசிரியர் பணி வழங்கப்பட்டது. அப்போது போட்டித் தேர்வு எதுவும் நடத்தப்படவில்லை. ஆனால், 2018ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட 149 என்ற எண் கொண்ட அரசாணை மூலம் போட்டித் தேர்வை அப்போதைய அரசு திணித்தது.

அதற்கு பா.ம.க.வுடன் இணைந்து எதிர்ப்பு தெரிவித்த அப்போதைய எதிர்கட்சித் தலைவர் ஸ்டாலின், திமுக ஆட்சிக்கு வந்தால் போட்டித் தேர்வை ரத்து செய்வோம் என்று சூளுரைத்திருந்தார். என்னை அதிர்ஷ்டசாலி என்று சொல்ல முடியாது.. மகள் நிச்சயதார்த்தம் முடிந்ததும் ராதா உருக்கமான பதிவு திமுகவின் தேர்தல் அறிக்கையிலும் இது குறித்து வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், திமுக அரசு பொறுப்பேற்று 30 மாதங்களுக்கு மேலாகியும் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. தமிழ்நாடு முழுவதும் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற 60 ஆயிரத்திற்கும் கூடுதலானவர்களுக்கு அதிகபட்சமாக 10 ஆண்டுகளாக வேலை வழங்கப்படவில்லை. அவர்கள் போட்டித் தேர்வு எழுதி தான் பணியில் சேர வேண்டும் என்றால், அதற்கான பயிற்சியைப் பெற அவர்கள் பல லட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டும். அந்த வகையில் பணம் படைத்த, நகர்ப்புற மாணவர்களுக்கு மட்டுமே ஆசிரியர் பணி கிடைப்பதற்கு போட்டித் தேர்வு வகை செய்கிறது. எனவே, இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணிக்கு போட்டித் தேர்வை கட்டாயமாக்கும் அரசாணை எண் 149ஐ தமிழ்நாடு அரசு ரத்து செய்ய வேண்டும். அதற்கு பதிலாக தகுதித் தேர்வு அடிப்படையில் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று கேட்டுக்கொண்டு உள்ளார்.

# தேர்தல் டைம்ல நடந்த சம்பவம்: பாஜகவில் இருந்து கவுதமி விலகல்: அண்ணாமலைக்கு நெருக்கடி



சென்னை, அக். 24

நடிகை கவுதமி பாஜகவில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பில் அண்ணாமலை மீது மறைமுகமாக கவுதமி புகார்களை வைத்துள்ளார்.

பாஜகவில் இருந்து விலக்கியதற்கு அழகப்பன் என்ற பாஜக நிர்வாகி மீது கவுதமி புகார் வைத்துள்ளார். அதில், சி.அழகப்பன் எனது பணம், சொத்து மற்றும் ஆவணங்களை மோசடி செய்து என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளார்.

அழகப்பன் 20 ஆண்டுகளுக்கு முன்பு, எனது தனிமையை கண்டு என்னை அணுகினார், ஏனெனில் நான் என் பெற்றோர் இருவரையும் இழந்த ஒரு அனாதை மட்டுமல்ல, ஒரு கைக்குழந்தையுடன் கணவர் இன்றி ஒரு தாயாகவும் இருந்தேன். அக்கறையுள்ள ஆண் என்ற போர்வையில் அவர் என்னையும் எனது குடும்பத்தையும் ஆதரிப்பது போல வந்தார். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு இந்தச்சூழ்நிலையில்தான் எனது பல நிலங்களின் விற்பனை மற்றும் ஆவணங்களைஅவரிடம்ஒப்படைத்தேன், சமீபத்தில் தான் அவர் என்னிடம் மோசடி செய்ததைக் கண்டுபிடித்தேன். என்னையும் என் மகளையும் அவரது குடும்பத்தில் ஒரு அங்கமாக வரவேற்பது போல் பாசாங்கு செய்து அவர் நன்றாக ஏமாற்றி விட்டார். .

நான் உழைத்து சம்பாதித்த பணம், சொத்துக்கள் மற்றும் ஆவணங்களை மீட்டெடுப்பதற்காக, கடுமையாக போராடி வருகிறேன்,என்றுகூறியுள்ளார்.

அண்ணாமலை மீது புகாரா? : இதொரு நிற்காமல் பாஜக நிர்வாகிகள் மீதும்.. தலைமை மீதும் புகார் வைத்துள்ளார். அதில், 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலின் போது, ராஜபாளையம் தொகுதியின் வளர்ச்சியை உறுதி செய்ய பாடுபென்டன். பாஜகசார்பாகதொகுதியில் போட்டியிட உறுதியளித்தேன். ராஜபாளையம் மக்களுக்காகவும், அடிமட்ட அளவில் பாஜகவை வலுப்படுத்துவதற்காகவும் என்னை அர்ப்பணித்தேன். எனினும், கடைசி நிமிடத்தில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது.

ஆனால் அதை எல்லாம் பொருட்படுத்தாமல், கட்சி மீதான எனது உறுதிப்பாட்டைக் காப்பாற்றினேன். இருப்பினும் 25 வருடங்கள் கட்சிக்கு உறுதியான விசுவாசம் இருந்தும், எனக்கு அழகப்பன் விவகாரத்தில் முழு ஆதரவு இல்லாததையும், மேலும் பாஜகவின் பல மூத்த உறுப்பினர்கள் அழகப்பனுக்கு உதவி செய்து வருவதையும் உணரும் போது உடைந்து போய் கட்சியில் இருந்து வெளியேறுகிறேன், என்று கூறியுள்ளார்.

தேர்தல் வாய்ப்பு: முக்கியமாக தேர்தலில் வாய்ப்பு கிடைக்காததை மறைமுகமாக அவர் சுட்டிக்காட்டி புலம்பி உள்ளார். வானதிக்கு இது பெரிய பிரஷராக மாறியுள்ளது. இப்போது இந்த விவகாரத்தில் வானதி வருத்தம் தெரிவித்துள்ளார். கவுதமியை எதிர்க்காமல்.. மறைமுகமாக அவருக்கு ஆதரவாக பேசி உள்ளார்.

பாஜகவில் இருந்து விலகுவதாக நடிகை கவுதமி கடிதம் அளித்தது வருத்தம் அளிக்கிறது. தன்னம்பிக்கை தைரியம் கொண்ட கவுதமி கட்சியின் அடிப்படை தொண்டராக இருந்தார். அவர் சென்றது வருத்தம் தருகிறது என்று வானதி சீனிவாசன் காட்டமாக தெரிவித்துள்ளார். ஏற்கனவே பாஜகவில் இருந்து காயத்திரி ரகுராம் தொடங்கி பல சினிமா நிர்வாகிகள் .. குறிப்பிட்ட ஜாதியினர் வெளியேறி வருகின்றனர்.

இந்த நிலையில்தான் கட்சி மற்றும் தலைவர்களிடமிருந்து எனக்கு எந்த ஆதரவும் இல்லை. அது மட்டுமல்லாமல், என் நம்பிக்கைக்கு துரோகம் செய்து என் வாழ்நாள் சம்பாத்தியத்தை ஏமாற்றியவன் ஒருவனுக்கு கட்சியில் பலர் தீவிரமாக உதவுகிறார்கள், அந்த ஏமாற்றுகாரனுக்கு நெருங்கிய நண்பனாக இருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும்., என்று கூறிவிட்டு கவுதமி விலகி உள்ளார்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 24.10.2023



# மீண்டும் உண்மை சம்பவத்தில் நடிக்கும் லிஜோமோல் ஜோஸ்

நடிகை ரோகிணி புதிய படம் ஒன்றை இயக்குகிறார். இந்த படத்தில் லிஜோமோல் ஜோஸ் நடிக்கிறார்.

சமூகத்தில் பல வன்கொடுமைகள் நடந்து வருகிறது. இதனை உலக மக்களுக்கு தெரியப்படுத்தும் விதமாக இயக்குனர்கள் பலர் இந்த உண்மை சம்பவத்தை மையமாகவைத்துபலபடங்களைஇயக்கிவருகின்றனர். இந்த வரிசையில் தற்போது 1992ல் தமிழ் நாட்டை உலுக்கிய வாசாத்தி வன்முறை சம்பவம் திரைப்படமாக உருவாகவுள்ளதாக கூறப்படுகிறது.

நடிகை ரோகிணி இயக்கும் இந்த படத்தில் 'ஜெய்பீம்' படத்தில் நடித்த லிஜோமோல் ஜோஸ் கதாநாயகியாக நடிக்கவுள்ளதாகவும் இப்படத்திற்கு எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா திரைக்கதை, வசனம் எழுதவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. லிஜோமோல் ஜோஸ் மீண்டும் உண்மை சம்பவத்தில் நடிக்கவுள்ளதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.



# விஜய்யுடன் நடிக்கும் அஜ்மல்

விஜய்யின் 68வது படத்தில் அஜ்மல் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருவதாக கூறப்படுகிறது.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்த 'லியோ' படம் உலகம் முழுவதும் திரைக்கு வந்து ஓடிக்கொண்டு இருக்கிறது. இதனைத்தொடர்ந்து வெங்கட்பிரபு இயக்கத்தில் விஜய் நடிக்கவுள்ளார். இது விஜய்யின் 68வது படம் ஆகும். இதில் மோகன், ஜெயராம், சினேகா, மீனாட்சி சவுத்ரி, பிரபுதேவா, பிரசாந்த் உள்பட பலர் நடிக்கிறார்கள்.

இது வெங்கட்பிரபு பாணி ஜாலியான படமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமீபத்தில் படத்தின் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியது. படத்தில் அஜ்மல் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருவதாக கூறப்படுகிறது. குறிப்பாக விஜய்யுடன் அவர் நடிக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இதை உறுதிப்படுத்தும் வகையில் படப்பிடிப்பு தளத்தில் விஜய்யுடன், அஜ்மல் இருக்கும் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

'அஞ்சாதே', 'கோ', 'மாற்றான்', 'தீர்க்கதரிசி' போன்ற படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் அஜ்மல் நடித்துள்ளார். இதுதவிர மலையாள, தெலுங்கு படங்களிலும் அஜ்மல் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விரைவில் வருகிறார் சர்தார் 2.. கார்த்தி கொடுத்த அப்டேட்



கார்த்தி நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான திரைப்படம் 'சர்தார்'. இப்படம் கடந்த ஆண்டு வெளியாகி ரூ.100 கோடி வசூலை குவித்தது.

பி.எஸ்.மித்ரன் இயக்கத்தில் கார்த்தி நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான படம் 'சர்தார்'. இதில் வில்லனாக இந்தி நடிகர் சங்கி பாண்டே நடித்திருந்தார். மேலும், ராஷிகண்ணா, ரஜிஷா விஜயன், லைலா, யுகி சேது, முனிஷ்காந்த், மாஸ்டர் ரித்விக், அவினாஷ், முரளி ஷர்மா மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். பிரின்ஸ் பிக்சர்ஸ் தயாரித்த இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்திருந்தார்.

'சர்தார்' திரைப்படம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று ரூ.100 கோடி வரை வசூலை குவித்தது. இந்நிலையில், இப்படம் வெளியாகி ஓராண்டு நிறைவு செய்துள்ளது. இதனை தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள கார்த்தி 'சர்தார் 2' விரைவில் உருவாகவுள்ளதாக அப்டேட் கொடுத்துள்ளார். இந்த அப்டேட் ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.

# நானியுடன் இணைந்த சூர்யா பட நடிகை



நடிகர் நானி 'ஹாய் நான்னா' திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியானது.

தெலுங்கில் முன்னணி நடிகரான நானி வித்தியாசமான கதைக்களத்தை தேர்ந்தெடுத்து தன் நடிப்பின் மூலம் ரசிகர்களை கவர்ந்து வருகிறார். இவர் தற்போது இயக்குனர் சவுரவ் இயக்கத்தில் 'ஹாய் நான்னா' திரைப்படத்தில் நடித்துள்ளார். அப்பா மகள் உறவை மையமாக வைத்து உருவாகும் இப்படத்திற்கு ஹசம் அப்துல் இசையமைக்கிறார்.



இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி வரவேற்பை பெற்றது.

இதைத்தொடர்ந்து நடிகர் நானியின் 31வது படத்தை 'அடடே சுந்தரா' இயக்குனர் விவேக் ஆத்ரேயா இயக்குகிறார். இந்த படத்தை டிடிவி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரிக்கிறது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, இந்த படத்தில் நடிகை பிரியங்கா மோகன் இணைந்துள்ளார். இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. சூர்யா நடிப்பில் வெளியான 'எதற்கும் துணிந்தவன்' திரைப்படத்தில் பிரியங்கா மோகன் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாயாரின் மருத்துவ சிகிச்சைக்காக சென்னைக்கு குடியேறும் அமீர்கான்



தாயாரின் மருத்துவ சிகிச்சைக்காக சென்னையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, சில மாதங்கள் அங்கு தங்கியிருக்கவும் அமீர்கான் முடிவு செய்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

குடும்பத்துடன் நேரம் செலவிடுவதற்காக தற்காலிகமாக சினிமாவுக்கு ஓய்வு கொடுத்துள்ளார், அமீர்கான். புதிய படங்களுக்கான கதைகளையும் இப்போதைக்கு அவர் கேட்பதாக இல்லை. இதற்கிடையில் மும்பையில் இருந்து சென்னைக்கு தற்காலிகமாக குடியேற அமீர்கான் திட்டமிட்டுள்ளார். அதற்கு காரணம், அவரது தாயார் ஜூனத் ஹூசைன் தானாம்.

கடந்த ஆண்டு ஜூனத் ஹூசைனுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. பின்னர் சிகிச்சை மேற்கொண்டு வீடு திரும்பினார். தற்போது அவருக்கு மீண்டும் சிகிச்சை தேவைப்படும் நிலையில், சென்னையில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் அவருக்கு சிகிச்சை மேற்கொள்ள முடிவு செய்திருக்கிறார்கள்.

மேலும் தாயாரை உடனிருந்து கவனிக்கும் வகையில், ஆஸ்பத்திரிக்கு அருகே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, சில மாதங்கள் அங்கு தங்கியிருக்கவும் அமீர்கான் முடிவு செய்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

இந்த சிகிச்சை நடைமுறைகள் முடிந்ததும், 'சிதாரே ஜமீன் பர்' என்ற படத்தை தயாரித்து நடிக்கவும் அமீர்கான் திட்டமிட்டுள்ளார். 2007ம் ஆண்டு 'தாரே ஜமீன் பர்' படத்தில் அமீர்கான் நடித்து இயக்கி இருந்தார். இப்போது தயாராகும் புதிய படம் காமெடி கலாட்டாவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆட்டத்துக்கு நாங்க ரெடி... கவனம் ஈர்க்கும் 'லப்பர் பந்து' போஸ்டர்




கனா, எஃப்ஐஆர் படங்களில் இணை இயக்குனர் மற்றும் நெஞ்சுக்கு நீதி படத்திற்கு வசனம் எழுதிய தமிழரசன் பச்சமுத்து இயக்குனராக அறிமுகமாகும் படம் 'லப்பர் பந்து'. இப்படத்தை சர்தார், காரி, ரன் பேபி ரன் உள்ளிட்ட படங்களை இயக்கிய பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தில் ஹரிஷ் கல்யாண் மற்றும் அட்டகத்தி தினேஷ் இணைந்து கதாநாயகர்களாக நடிக்கின்றனர்.

சுவாசிகா விஜய் மற்றும் வதந்தி வெப் தொடரின் மூலம் பிரபலமடைந்த சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி கதாநாயகிகளாக நடிக்கின்றனர். மேலும் தேவதர்ஷினி, பால சரவணன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கின்றனர். இந்த படத்துக்கு ஷான் ரோல்டன் இசையமைக்கிறார். தினேஷ் புருஷோத்தமன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இந்த நிலையில், ஆயுத பூஜையை முன்னிட்டு ரசிகர்களுக்கு வாழ்த்து தெரிவித்து 'லப்பர் பந்து' படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது. ஹரிஷ் கல்யாண் மற்றும்அட்டகத்திதினேஷ்இடம்பெற்றுள்ளஇந்தபோஸ்டர்தற்போதுஇணையத்தில் வைரலாகி வருகிறது.

# டிஜிட்டலுக்கு மாற்றம்: கமலின் 'நாயகன்' படம் மீண்டும் ரிலீஸ்



கமல்ஹாசன்நடித்த'நாயகன்'திரைப்படத்தைடிஜிட்டலுக்குமாற்றிரீரிலீஸ்செய்யதிட்டமிடப்பட்டு உள்ளது.

உலகநாயகன் கமல்ஹாசன் 'விக்ரம்' படத்துக்கு பிறகு, நாக் அஷ்வின் இயக்கத்தில் உருவாகி வரும் 'கல்கி' படத்தில் வில்லனாக நடித்து வருகிறார். அமிதாப் பச்சன், பிரபாஸ், தீபிகா படுகோனே, துல்கர் சல்மான், திஷா பதானி என பெரும் நட்சத்திர பட்டாளங்களே நடிக்கிறார்கள்.

கமல்ஹாசன் தனது 69வது பிறந்தநாளை அடுத்த மாதம் (நவம்பர்) 7ந்தேதி கொண்டாட இருக்கிறார். இதையொட்டி, கமல்ஹாசன் நடித்த 'நாயகன்' திரைப்படத்தை டிஜிட்டலுக்கு மாற்றி ரீரிலீஸ் செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது.

'நாயகன்' படம் மீண்டும் திரையிடப்படுவது குறித்து வினியோகஸ்தர் மதுராஜ், நடிகர் அரீஷ்குமார் ஆகியோர் கூறுகையில், "ஏற்கனவே கமல்ஹாசன் நடித்த 'வேட்டையாடு விளையாடு' படம் ரீரிலிஸ் செய்யப்பட்டது. தற்போது கமல்ஹாசனின் பிறந்தநாளை முன்னிட்டு நவம்பர் 3ந்தேதி 'நாயகன்' படத்தை டிஜிட்டலுக்கு மாற்றி ரீரிலீஸ் செய்யவுள்ளோம். தமிழ்நாட்டில் மட்டும் 120 தியேட்டர்களில் படம் வெளியாக இருக்கிறது'', என்றனர்.

1987ம் ஆண்டு மணிரத்னம் இயக்கத்தில் உருவான இந்த படம் மிகப்பெரிய தாக்கத்தை சினிமாவில் ஏற்படுத்தியது. மேலும் சிறந்த நடிப்புக்காக கமல்ஹாசனுக்கு தேசிய விருதும் கிடைத்தது. ஒளிப்பதிவாளர், கலை இயக்குனர் பிரிவிலும் தேசிய விருதுகள் கிடைத்தன.

இது கமல்ஹாசன் ரசிகர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

# ஆசிய ஜூனியர் பேட்மிண்டனில் இந்திய வீரர் சாதனை



ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி சீனாவின் செங்டுவில் நடந்தது. இதில் சிறுவர்களுக்கான 15 வயதுக்குட்பட்டோர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் போர்னில் ஆகாஷ் சாங்மாய் 2119, 2113 என்ற நேர் செட்டில் பேன் ஹாங் சூவானை (சீனா) வீழ்த்தி தங்கப்பதக்கத்தை வென்றார்.

அசாமை சேர்ந்த 13 வயதான போர்னில், இந்த பிரிவில் மகுடம் சூடிய 2வது இந்தியர் என்ற சாதனையை படைத்தார். 17 வயதுக்குட்பட்டோர் சிறுமியர் பிரிவில் இந்தியாவின் தன்வி ஷர்மா 1721, 2111, 1921 என்ற செட் கணக்கில் யட்டாவீமின் கேட்லியாங்கிடம் (தாய்லாந்து) தோற்று வெள்ளிப்பதக்கத்துடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று.



# 'ஏ' டிவிசன் லீக் கைப்பந்து: எஸ்.ஆர்.எம். முதலிடம்

சென்னை மாவட்ட கைப்பந்து சங்கம் சார்பில் எஸ்.என்.ஜெ. குழுமம் ஆதரவுடன் 'ஏ' டிவிசன் லீக் கைப்பந்து போட்டி எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் கடந்த 9ந்தேதி தொடங்கியது.

8 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில் கடைசி நாளான நேற்று நடந்த ஆட்டங்களில் ஐ.சி.எப் அணி 2520, 1725, 2522, 2826 என்ற செட் கணக்கில் வருமான வரியையும், ஐ.ஓ.பி. 2515, 2624, 2426, 2521 என்ற செட்டில் எஸ்.ஆர்.எம். அணியையும் வீழ்த்தியது. லீக் முடிவில் எஸ்.ஆர்.எம். மற்றும் இந்தியன் வங்கி அணிகள் தலா 5 வெற்றி, 2 தோல்வி என்று 15 புள்ளிகளுடன் சமநிலை வகித்தன. செட் அடிப்படையில் எஸ்.ஆர்.எம். அணி முதலிடத்தை பிடித்து ரூ.1½ லட்சம் பரிசுத் தொகையை வசப்படுத்தியது.

இந்தியன் வங்கி 2வது இடத்துடன் ரூ.1 லட்சத்தை பெற்றது. ஐ.ஓ.பி. அணி 3வது இடத்தையும், டி.ஜி. வைஷ்ணவா 4வது இடத்தையும் பிடித்தன. பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில், ஓய்வு பெற்ற விமானநிலைய ஆணைய சேர்மன் மச்சேந்திரநாதன் பரிசுகளை வழங்கினார். தமிழ்நாடு கைப்பந்து சங்க வாழ்நாள் தலைவர் அர்ஜூன்துரை, எஸ் அண்ட் எஸ் பேஷன் லிமிடெட் நிர்வாக இயக்குனர் சந்தோஷ் பிரபு, மாவட்ட கைப்பந்து சங்க நிர்வாகிகள் ஆர்.வி.எம்.ஏ.ராஜன், ஜெகதீசன், பழனியப்பன், ஸ்ரீகேசவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# ஐ.டி.எப். டென்னிஸ்: தமிழக வீரர் ராம்குமார் 'சாம்பியன்'

கர்நாடக மாநிலம் தார்வாத் நகரில் ஐ.டி.எப். டென்னிஸ் போட்டி நடந்து வந்தது. இதில் நேற்று நடந்த ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இந்திய வீரர் ராம்குமார் 76 (75), 76 (86) என்ற நேர் செட்டில் சக நாட்டவர் திக்விஜய் பிரதாப் சிங்கை தோற்கடித்து சாம்பியன் கோப்பையை தட்டிச் சென்றார்.

இந்த வெற்றியின் மூலம் சென்னையைச் சேர்ந்த ராம்குமாருக்கு ரூ.3 லட்சம் பரிசுத்தொகையுடன் 20 தரவரிசை புள்ளிகளும் கிடைத்தது. தொடர்ந்து கர்நாடகா டென்னிஸ் சங்கம் சார்பில் நடந்த பாராட்டு விழாவில், ஆசிய விளையாட்டில் இரட்டையர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றதற்காக ராம்குமாருக்கு ரூ.1 லட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: ஜாம்ஷெட்பூர் பஞ்சாப் எப்.சி. ஆட்டம் டிரா



12 அணிகள் இடையிலான 10வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த தொடரில் ஜாம்ஷெட்பூரில் இன்று நடைபெற்ற போட்டியில் ஜாம்ஷெட்பூர் பஞ்சாப் எப்.சி. அணிகள் மோதின.

இந்த போட்டியில் இரு அணிகளும் எந்த கோலும் அடிக்கவில்லை. இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் ஜாம்ஷெட்பூர் பஞ்சாப் எப்.சி. அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 00 என்ற கணக்கில் டிராவில் முடிந்தது.



# நியூசிலாந்துக்கு எதிரான வெற்றி...இந்திய அணியை பாராட்டிய பிரதமர் மோடி...!

10 அணிகள் கலந்து கொண்டுள்ள 50 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி நியூசிலாந்தை வீழ்த்தி தொடர்ச்சியாக 5வது வெற்றியை பதிவு செய்தது. இந்நிலையில் நியூசிலாந்தை வீழ்த்தி அபார வெற்றி பெற்ற இந்திய அணிக்கு பிரதமர் மோடி வாழ்த்துகள் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில், நியூசிலாந்துக்கு எதிரான அபார வெற்றிக்கு இந்திய கிரிக்கெட் அணிக்கு வாழ்த்துக்கள். இது ஒரு அற்புதமான குழு முயற்சியாகும், அங்கு அனைவரும் பங்களித்தனர். களத்தில் வீரர்களின் அர்ப்பணிப்பும் திறமையும் முன்மாதிரியாக இருந்தது. இவ்வாறு அதில் பதிவிடப்பட்டுள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.